


இந்து மதத்தையும் பவுத்த மதத்தையும் மிக்ஸியில் போட்டு ஓர் ஆட்டு ஆட்டி, புத்தம்புதிய மதம் ஒன்றைப் படைத்தாகிவிட்டது. பற்றாக்குறைக்குப் பத்தாயிரம் தொண்டர்கள், பல லட்சம் பக்தர்கள். அவ்வப்போது செலவுக்கு நிதி கொடுக்க அரசியல்வாதிகளும் தொழிலதிபர்களும். பெண்டு பிள்ளைகளைப் பெற்று வைத்துக் கொண்டு, அவர்கள் மெய்ஞானம் பெற வகுப்புகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்த கோயிந்து பெற்றோர்கள். போதாது?

யதேஷ்டம். ஷோகோ அசஹாரா ஷோக்காகத் தன்னையும், தன் ஆசிரமத்தையும், அதன் கிளைகளையும் காபந்து பண்ணிக் கொண்டு விட்டார். மேல் பார்வைக்குப் பூந்தோட்டங்களும் அழகு நீர்த் தடாகங்களும் அமைதி தவழும் நந்தவனமுமாக ஓம் ஷின்ரிக்கியோ ஆசிரமங்கள் ஜொலிக்கும். பக்த கோடிகளும் சிஷ்ய கேடிகளும் தெய்வீகம் மணக்க மணக்கப் பேசுவார்கள். உள்ளுக்குள் அத்தனையும் கெட்ட காரியம்.

ஷோகோ, இரண்டு கட்டங்களாகத் தன் திட்டங்களைப் பிரித்துக் கொண்டார். முதலில் ஆயுதங்களையும் ஆயுதங்கள் தயாரிக்கவல்ல விற்பன்னர்களையும் 'வாங்குவது'. அடுத்தது, கேள்வி கேட்காமல் தான் தாக்கச் சொல்லும் இலக்கைப் போய்த் தாக்கிவிட்டு வர ஒரு பெரிய படையை உருவாக்குவது.

இந்த இரண்டு காரியங்களும் பூரணமடையாமல் விஷயம் வெளியே கசிந்துவிடாமல் பார்த்துக் கொள்வது கொசுறாக மூன்றாவது.

மிகத் தெளிவான திட்டம். இன்னொருத்தர் தலையீடு அல்லது கருத்து அல்லது ஒத்துழைப்பு என்பதே கிடையாது. ஒரே மனிதன். ஒரே யோசனை. ஒரே குறிக்கோள். உலகில் வசிக்கிற அத்தனை பேரும் தன் திட்டத்துக்குச் செயல்வடிவம் தருவதற்கு உதவவேண்டி, உலகைக் காக்கும் பரம்பொருள் அனுப்பி வைத்திருக்கும் உதவாக்கரைகள். இதில் அவருக்கு மாற்றுக் கருத்தே இல்லை.

ஆயுதங்கள் விஷயத்தில் ஷோகோவுக்கு முதலிலிருந்தே ரஷ்யா மீதுதான் கண் இருந்தது. அங்கே ஆயுதங்கள் வாங்குவதும் சுலபம், ஆயுதத் தயாரிப்பு வல்லுநர்களைப் பிடிப்பதும் சுலபம் என்று எங்கோ கேள்விப்பட்டிருந்தார். 'ரஷ்யா என்ன காத தூரமா? பக்கம்தானே? அங்கு ஒரு பிராஞ்ச் போட்டால் போயிற்று' என்று முடிவு செய்தார் ஷோகோ.

உடனடியாக ரஷ்யாவில் இருக்கும் ஷோகோவின் பக்த கோடிகளை அழைத்து, ரஷ்யாவில் ஓம் இயக்கத்துக்கான கிளைகளைத் தொடங்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

ரஷ்ய பக்தர்கள் புளகாங்கிதமடைந்தார்கள். ஆஹா, என்ன கொடுப்பினை! மாகாளி பராசக்தியே உருசிய நாட்டின்மீது கடைக்கண் வைத்துவிட்ட மாதிரி நெகிழ்ந்து நெக்குருகி, உடனடியாக



ஓலேக் லபோவ்

வேலையைத் தொடங்கிவிட்டார்கள்.

ஷோகோவுக்கே அப்போதுதான் ரஷ்யாவில் தன் பலம் என்னவென்பது புரிந்தது. ஜப்பானில் அவருக்கு இருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குச் சற்றேறக் குறைய ரஷ்யாவிலும் இருந்தார்கள். தினசரி வந்து குவிந்த கடிதங்களும் நன்கொடைகளும் நேரடி விசிட்டர்களும் அவருக்கு ஒரு விஷயத்தைத் தெள்ளத் தெளிவாகப் புரிய வைத்து விட்டன.

உலகின் அதி உன்னத மாங்கா மடையர்கள் ரஷ்யர்களே. இவர்கள் தலையில் எத்தனை மூட்டை மிளகாய் வேண்டுமானாலும் அரைக்கலாம்.

இதில் உச்சபட்ச காமெடி ஒன்று உண்டு. அன்றைய சோவியத் அரசில் மிகுந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய பிரமுகராகவும், தேசத்தின் துணைப் பிரதமராகவும் இருந்த ஓலேக் லபோவ் (Oleg Lobov) என்பவர் எதிர்பாராவிதமாக ஓம் ஷின்ரிக்கியோவின் பக்தராகிப் போனார். கம்யூனிசம், கார்ல் மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் மற்றும் ஷோகோ அசஹாரா என்பது கொஞ்சம் நெருடக்கூடிய வரிசைதான். ஆனால், என்ன பண்ணுவது? துதித்துவிடுவது என்று அவர் முடிவு செய்துவிட்டார். துணைப் பிரதமரை யார் தடுப்பது? அட, துணைப் பிரதமரே ஷோகோவின் பக்தராக இருக்கிறாரே என்று சோவியத் குடிமக்கள் அலையலையாகத் திரண்டு வரத் தொடங்கிவிட்டார்கள். மூலைக்கு மூலை ஓம் இயக்கத்தின் கிளைகள் தொடங்கப்பட்டன. ஜப்பானிலிருந்து சோவியத்துக்கும், சோவியத்திலிருந்து ஜப்பானுக்கும் பிரமுகர்கள் நல்லெண்ண விஜயங்களை அடிக்கடி மேற்கொண்டார்கள். ஷோகோ தன் ரஷ்ய பக்தர்களைக் குஷிப்படுத்துவதற்காக ஒரு கேசட்டில் ஒரு மணி நேரத்துக்கு ஆன்மிகப் பிரசங்கம் ஒன்று செய்து அனுப்பி வைத்தார்.

அதை தலைமை பக்தரான லபோவ் கேட்டு நெக்குருகி, உடனடியாக ரஷ்யன் ஃபெடரல் ரேடியோ நிலைய இயக்குநரைக் கூப்பிட்டு, தினசரி ஒருமணி நேரம் ஷோகோவின் சொற்பொழிவுகளை ஒலிபரப்பச் சொல்லி உத்தரவிட்டார்.

விதி யாரை விட்டது? கம்யூனிசக் கொழுந்துகள் தினசரி ராத்திரியானால் ஒன்பதிலிருந்து பத்து மணிவரைக்கும் மகான் ஷோகோவின் பேருரைகளைக் கேட்டுக் கண்ணீர் உகுக்கலானார்கள்.

இவ்வாறாக, சோவியத் ரஷ்யா முழுவதும் தன்னுடைய ஆதிக்கத்தை வலுவாக வேரூன்றியவுடன், ஷோகோ மெல்ல மெல்ல அங்கே ஆயுதங்களை வாங்கி ஜப்பானுக்கு அனுப்பும் பணியைத் தொடங்கினார்.

காலாஷ்நிக்காவ் என்றால் தமிழில் துப்பாக்கி. ஏ.கே. ரகங்கள். லேசு ரகக் கைத்துப்பாக்கிகள். வெடி குண்டுகள். எளிய ராணுவ வாகனங்கள். ஜீப்புகள், ஆம்புலன்ஸ் போன்றவை. ஆழம் பார்ப்பதற்காக அந்த முயற்சி. ஒன்றும் பிரச்னையில்லை என்றால், 'ஒரு நாலு வீசை போர் விமானங்கள் வாங்குவதற்கும் அவர் தயார்தான். முடிந்தால் ஒரு போர்க்கப்பலே கூட. பணம் அவருக்கு ஒரு பிரச்னையே இல்லை. ஆசிரமத்தின் தோட்டத்தில் நட்டுவைத்த பூச்செடிகளெல்லாம் டாலர் நோட்டுகளாகவும் யென் நோட்டுகளாகவும் ரூபிள்களாகவுமே பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன.

கட்டுப்பாடுகள் மிகுந்த சோவியத் ரஷ்யாவில் அதற்கேற்ப கள்ளச் சரக்குகள் விற்பனையும் கனஜோராக இருந்தது. ஆசிரமத்துக் கொழுந்துகளுக்கு ஷோகோ அளித்த உத்தரவு இதுதான். 'ஒரு எக்ஸ்பர்ட்டைப் பிடியுங்கள். வாங்குகிற ஆயுதங்களை அவர் பரிசோதித்து தரச் சான்றிதழ் தரவேண்டும். பிறகு சரக்குக் கப்பல்களில் ஏற்றி பாங்காக்குக்கு அனுப்பிவிடவும். அங்கிருந்து ஜப்பானுக்குக் கொண்டுவரும் பணியை பாங்காக் பக்தர்கள் பார்த்துக் கொள்வார்கள்.'



மனைவி, குழந்தையுடன் சுட்சுமி சகமோடோ...

ஒரு விஷயம். ஆசிரமத்து பக்தகோடிகள் அத்தனை பேருக்கும் இதெல்லாம் தெரியும் என்று நினைத்துவிட வேண்டாம். ஒவ்வொரு ஆசிரமக் கிளைக்கும் ஷோகோ தன் தலைமை அலுவலகத்திலிருந்து நிர்வாகப் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தார். அதாவது, அவரது அடியாட்களில் ஒருவர் அல்லது ஒரு சிலர். அவர்களைக் கொண்டுதான் இந்த ரகக் கெட்ட காரியங்களை அவர் செய்துகொண்டிருந்தார். பக்தர்களுக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. பிற்பாடு பக்தர்களிடையே அவர் எழுச்சிப் பேருரையாற்றி, உலக யுத்தம் குறித்த செயற்கையான அச்சத்தை விதைத்து, அதிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள, இதைத்தவிர வேறு வழியில்லை என்று பல்லாயிரக்கணக்கானோரைச் சுண்டி இழுத்ததெல்லாம் கிளைமாக்ஸுக்குப் பக்கத்தில்தான் வரும்.

அது ஒருபுறமிருக்க, ரஷ்யாவிலிருந்து அவர் தருவிக்க விரும்பிய ஆயுதங்கள், கொஞ்சம் கொஞ்சமாக வர ஆரம்பித்தன. பளபளப்பான துப்பாக்கிகள். பெட்டி பெட்டியாக குண்டுகள். பைனாகுலர்கள். திசைகாட்டிகள். ஷோகோ அவற்றை ஆசையாகத் தடவிப் பார்த்தார். அற்புதம். இதை வைத்துக்கொண்டு என்ன செய்யலாம்? ஏதாவது செய்யலாம். அதுவா இப்போது முக்கியம்? முதலில் இவற்றைப் பத்திரப்படுத்த உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும்.

ஜப்பானிலேயே ஓம் ஷின்ரிக்கியோவுக்கான (ஆன்மிக சத்துபான) கொடோன்கள் அதிகம். அப்படியொரு போர்வையில் ஆயுத கொடோன்களாக அவற்றையே மாற்றிவிடலாமா?

யோசித்துவிட்டு, வேண்டாம் என்று முடிவு செய்தார். சத்துபானம் ஓடிக்கொண்டிருக்கட்டும். இது வேறு. இரண்டையும் குழப்ப வேண்டாம். தனியே ஆயுத கொடோன்கள் உடனடியாகக் கட்டப்பட்டன. அது ஒரு பெரிய விஷயமா? தியான மண்டபம், பல்கலைக்கழகம், மாட்டுக்கொட்டாய் என்று என்னத்தைச் சொன்னாலும்தான் ஏற்றுக்கொள்ள மக்கள் ரெட்டை ரெடியாக இருக்கிறார்களே.

ஆனால் எல்லோரும் இல்லை. ஜப்பானிலும் வெளியிலும் ஷோகோவின் நடவடிக்கைகளை சந்தேகக் கண்ணோடு பார்த்துக் கொண்டிருந்தவர்களும் அதிகம். குறிப்பாக மீடியாக்காரர்கள். சில வழக்கறிஞர்கள். பொதுநல ஆர்வலர்கள்.

எண்பதுகளின் இறுதியில் ஓம் இயக்கம் எத்தனை பிரசித்தி பெற்று, வீரியமுடன் இயங்கத் தொடங்கியிருந்ததோ, அதே அளவுக்கு அதன்மீதான குற்றச்சாட்டுகளும் சந்தேகங்களும் கூட ஜப்பானைப் புயல்போலத் தாக்கின. ஓம் ஷின்ரிக்கியோ ஆசிரமத்தில் கட்டாயப்படுத்தி உறுப்பினர்களைச் சேர்க்கிறார்கள் என்றும், ஏகப்பட்ட பணம் கறக்கிறார்கள் என்றும், உள்ளே நடக்கிற எது ஒன்றும் நம்பகமானதாக இல்லை என்றும் மீடியாக்கள் சில அரசல் புரசலாக எழுதவும் பேசவும் தொடங்கின.

பிப்ரவரி 1989-ல் ஓம் ஆசிரமத்தில் வசித்து வந்த ஒரு சிஷ்யர், தற்கொலை செய்துகொண்டு இறந்ததாக விஷயம் வெளியே வந்தது. அது தற்கொலை இல்லை; கொலைதான் என்று ஒருசாரார் குரல் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

'பொதுவாழ்க்கையில் இதெல்லாம் சகஜமப்பா' என்று நமது ஷோகோ முனிபுங்கவர், கவுண்டமணி மாதிரி சொல்லிவிட்டு, தனது வழக்கறிஞர்களை அழைத்து, 'பார்த்து'க் கொள்ளச் சொல்லி விட்டார். அது கொலையா, தற்கொலையா என்று இறுதிவரை வெளியே வரவேயில்லை.

இன்னொரு சம்பவமும் நடந்தது. இது இன்னமுமே கூட விவகாரமானது. சுட்சுமி சகமோடோ

(Tsutsumi sakamoto) என்றொரு வழக்கறிஞர் இருந்தார். இந்த வெறும் சிவில், வெறும் கிரிமினல் வழக்குகளெல்லாம் அவருக்குப் பிடிக்காது. எந்த வழக்கானாலும் ஒரு மசாலா நெடி இருந்தாலொழியச் சீண்டமாட்டார். ஜப்பானில் அவர் இதற்காகவே மிகவும் பிரபலம்.

சுட்சுமியின் ஸ்பெஷாலிடி, அவர் இந்த மாதிரி ஆன்மிக மோசடி பார்ட்டிகள் மீது எப்போதும் ஏதாவது வழக்குத் தொடுத்துக் கொண்டே இருப்பார் என்பதுதான். ஊரில் யார் எந்த சாமியின் பேரைச் சொல்லிக்கொண்டு ஆசிரமம் திறந்தாலும், ஒன்றிரண்டு வருடங்களுக்குள் மேற்படி சுட்சுமி லாயரிடமிருந்து ஏதாவது ஒரு நோட்டீஸ் வந்துவிடும். என்னத்தையாவது கண்டுபிடித்து, ஆதாரபூர்வமாக நிரூபிக்க நான் ரெடி, நீங்க ரெடியா என்று வரிந்துகட்டிக் கொண்டு நிற்பார்.

அப்பேர்ப்பட்டவர், நமது கதாபுருஷன் ஓம் ஷின்ரிக்கியோவின் பிதா ஷோகோவை மட்டும் விட்டுவைப்பாரா? 'இந்த ஆசாமி சரியில்லை; என்னமோ ஃப்ராடு வேலை பண்ணுகிறான்' என்று மக்களிடம் பேசத் தொடங்கினார். ஓம் இயக்கத்துக்கு எதிராக ஒரு மாபெரும் மக்கள் சக்தியைத் திரட்டும் முயற்சியிலும் ஈடுபடத் தொடங்கினார்.

அவரது எக்ஸ்பீரியன்ஸுக்கு ஓரளவு மீடியா சப்போர்ட்டும் அப்போது இருந்தது. நல்ல பேரும் கூட. ஆகவே, பரவலாக ஜப்பானில் ஓம் இயக்கத்தவர்களுக்கு எதிரானவர்கள் ஒன்று திரளுவதற்கான சாத்தியங்கள் உருவாகத் தொடங்கின. பேரணி, ஊர்வலம், அரசாங்கத்திடம் மனு அளிப்பு, காவல் நிலையத்தில் புகார் அளிப்பு, நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடர்வது என்று அஜெண்டா போட்டுவைத்துக் கொண்டு மேற்படி லாயர் தன் ஜனநாயகக் கடமைகளை ஆரம்பித்தார்.

கொஞ்சநாள் ஓடியிருக்கும். திடீரென்று ஒருநாள், அவரது வீட்டில் அதிகாலை மூன்று மணி சுமாருக்கு யாரோ அழையா விருந்தாளிகள் ஜன்னலை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள். விழித்துப் பார்த்த லாயர் மண்டையில் ஒரு போடு. ஒரு அடி. உருட்டுக்கட்டையோ, சுத்தியலோ. அம்மா என்று ஜப்பானிய மொழியில் அலறியபடி, அவர் கீழே விழுந்ததும் அவரது தர்மபத்தினி, என்னங்க... என்று அதே மொழியில் எழுந்து ஓடிவர, அவருக்கும் அதே அடி கிடைத்தது. இருவரும் கீழே விழுந்ததும் வாயில் துணி அடைத்து, கையைக் கட்டினார்கள்.

உறக்கம் கலைந்து அழத் தொடங்கிய அவர்களது சிறு குழந்தையின் மூக்கருகே பொட்டாசியம் க்ளோரைடு தெளித்த கர்ச்சீப்பைக் காட்டி சுருளவைத்தார்கள். அதே கெமிக்கலை லாயருக்கும் அவரது திருமதிக்கும் காட்டி சுருண்டு விழச் செய்தார்கள். அப்போதும் அடங்காமல் அவர்கள் திமிர, கெமிக்கலை ஒரு இன்ஜெக்ஷன் சிரிஞ்சில் அடைத்து இருவருக்கும் ஏற்றிவிட்டார்கள்.

மூவரையும் தனித்தனி டிரம்களில் திணித்து, ஆளுக்கொரு மூலையில் ஊரெல்லையில் கொண்டுபோய்க் கடாசிவிட்டு, வீட்டில் அவர்கள் கைபட்ட கட்டில் மெத்தைகளை எரித்து, எடுத்துக் கொண்டுபோய் கடலில் கரைத்துவிட்டு, ஆசிரமத்துக்குப் போய் 'சிவாய நமஹ' சொல்லத் தொடங்கினார்கள்.